உ

சிவமயம்



யாழ் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும்

லண்டன் Kentonஐ வதிவிடமாகவும் கொண்ட


**அமரர் திருமதி தங்கலட்சுமி நல்லையா** அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

01.04.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



There is only one religion, the religion of Love,
There is only one caste, the cast of Humanity
There is only one God , He is omnipresent.

\- Baba

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திருமதி திருமதி தங்கலட்சுமி நல்லையா

அவர்கள்

அன்னை
மடியில்
12
*
09
*
1924



ஈசன்
அடியில்
02
*
.03
*
2017

## திதி வெண்பா

ஆண்டு துர்முகி அமைந்த தைத்திங்கள்
பூண்ட அபரபக்க சஷ்டிதனில் - மாண்பு
நல்லையா பத்தினியார் தங்கலட்சுமி அம்மையார்
தில்லையம்பலத்தான் கழல் அடைந்தான் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பஞ்சபுராணம்

## விநாயகர் காப்பு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## தேவாரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே

## கோளறு பதிகம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டு முடனே
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன்வேண்டி

அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்

மாலுக்குச் சக்கரம் அன்றருள்

செய்தவன் மன்னியதில்லை தன்னுள்

ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற

சிற்றம்பலமே இடமாகப்

பாலித்து நட்டம் பயிலவல்

லானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவி லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமைந்த பெருமாளே

(அருணகிரிநாதர்)

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

- (காசியப்பசுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## பட்டினத்தார் பாடல்கள்

*தாயாருக்கு தகனக்கிரியைகள் செய்கையிற் பாடியது*

### நேரிசை வெண்பா

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்?

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவிய
மானே எனவழைத்த வாய்க்கு

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனா கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என வழைத்த வாய்க்கு?

கலி விருத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னிலங்கையிலே
அன்னை யிட்டதீ அடிவயிற்றில
யானும் இட்டதீ மூள்க மூள்கவே

நேரிசை வெண்பா

வேகுதே தீயதனில் வெந்துபொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமற் கோதோட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளே சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளே என்னை மறந்தாளே - சந்ததமும்
உன்னையே நாக்கி உகந்து வரங்கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய்
வீற்றிருந்தாள் அன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள் - பொற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம்

**நூற்பயன்**

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவி அடங்கக்
காத்தாளை அங்குசபாசங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்(கு) ஒரு தீங்கில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாது அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாதி
அருள்வாயி அபிராமியே.

## பெறற்கரிய பேறு பெற

தனந்தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா அஸ்டகம்

ஓம் அகிலாண்டநாயகியே போற்றி
ஓம் ஆதிபராசக்தியேபோற்றி
ஓம் அபிராமவல்லியேபோற்றி
ஓம் ஆயிரங்கண்ணியேபோற்றி
ஓம் அம்பிகைத்தாயேபோற்றி
ஓம் ஆசைகளைநிறைவேற்றுவோய் போற்றி
ஓம் அன்பின் உருவேபோற்றி
ஓம் ஆபத்தைத் தடுப்பாய் போற்றி
ஓம் அச்சம் தீர்ப்பாய் போற்றி
ஓம் ஆனந்தம் அளிப்பாய் போற்றி
ஓம் அல்லல் தீர்ப்பாய் போற்றி
ஓம் ஆற்றல் தருவாய் போற்றி
ஓம் இமயவல்லியேபோற்றி
ஓம் இல்லறம் காப்பாய் போற்றி
ஓம் இருசுடர் ஒளியேபோற்றி
ஓம் இருளைநீக்குவாய் போற்றி
ஓம் ஈசனின் பாதியேபோற்றி
ஓம் ஈஸ்வரிதேவியே போற்றி
ஓம் உமையெனும் அன்னையே போற்றி
ஓம் உற்சாகம் அளிப்பாய் போற்றி
ஓம் உண்மையின் பொருளே போற்றி
ஓம் உன்னதவரம் தருவாய் போற்றி
ஓம் ஊக்கம் அளிப்பவளே போற்றி
ஓம் ஊழ்வினைதீர்ப்பாய் போற்றி
ஓம் என் வழி துணையேபோற்றி
ஓம் ஏக்கம் தீர்ப்பாய் போற்றி
ஓம் எம்பிராட்டிஅம்மையே போற்றி
ஓம் ஏற்றம் அளிப்பாய் போற்றி
ஓம் ஐமுகன் துணையேபோற்றி
ஓம் ஐயங்கள் தீர்ப்பாய் போற்றி
ஓம் ஒளிரும் முகத்தவனே போற்றி
ஓம் ஓங்காரப் பொருளே போற்றி
ஓம் கயிலையான் துணைவியேபோற்றி
ஓம் காமாட்சிதேவியே போற்றி
ஓம் கடாட்சம் தருபவளே போற்றி
ஓம் காவல் தெய்வமே போற்றி
ஓம் கருணைதெய்வமே போற்றி
ஓம் கண்ணியத்தின் வடிவே போற்றி
ஓம் கற்பூரநாயகியே போற்றி
ஓம் கற்பினைக் காப்பாய் போற்றி
ஓம் கலாவல்லியே போற்றி
ஓம் கிரிபோல் உயர்ந்தவளே போற்றி
ஓம் கிலியைத் தீர்ப்பாய் போற்றி
ஓம் கீர்த்தியைத் தருவாய் போற்றி
ஓம் கூர்மதிதருவாய் போற்றி
ஓம் குவலயநாயகியேபோற்றி
ஓம் குலத்தைக் காப்பவளே போற்றி
ஓம் குமரனின் தாயேபோற்றி
ஓம் குற்றம் பொறுப்பாய் போற்றி
ஓம் கொற்றவைதெய்வமே போற்றி
ஓம் கொடுந்துயர் தீர்ப்பாய் போற்றி
ஓம் கோமதித்தாயே போற்றி
ஓம் கோள்களைஅடக்குவாய் போற்றி
ஓம் கொடுந்துயர் தீர்ப்பாய் போற்றி
ஓம் கோமதித்தாயே போற்றி
ஓம் கோள்களைஅடக்குவாய் போற்றி
ஓம் சங்கமிக்கும் கடலே போற்றி
ஓம் சாமுண்டேஸ்வரியே போற்றி
ஓம் சந்தோஷம் அளிப்பவளே போற்றி
ஓம் சாந்தமனம் தருவாய் போற்றி
ஓம் சக்தித்தாயே போற்றி
ஓம் சாபம் களைவாய் போற்றி
ஓம் சிம்மவாகனத்தாளே போற்றி
ஓம் சீற்றம் தணிப்பாய் போற்றி
ஓம் சிறுநகைபுரிபவளேபோற்றி
ஓம் சிக்கலைத் தீர்ப்பாய் போற்றி
ஓம் சுந்தரவடிவழகியே போற்றி
ஓம் சுபீட்சம் அளிப்பாய் போற்றி
ஓம் செங்கதிர் ஒளியே போற்றி
ஓம் சேவடிபணிகிறேன் போற்றி
ஓம் சோமசுந்தரியே போற்றி
ஓம் சோதனைதீர்ப்பாய் போற்றி
ஓம் தண்கதிர் முகத்தவளே போற்றி
ஓம் தாயேதந்தையே போற்றி
ஓம் திருவருள் புரிவாய் போற்றி
ஓம் திரிபுரசுந்தரியே போற்றி
ஓம் தீங்கினைஒழிப்பாய் போற்றி
ஓம் திரிசூலம் கொண்டவளே போற்றி
ஓம் திசையெட்டும் காப்பாய் போற்றி
ஓம் தீரம் அளிப்பவளே போற்றி
ஓம் துர்க்காதேவியே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் துன்பம் தீர்ப்பாய் போற்றி

ஓம் துணைவினைத் தருவாய் போற்றி
ஓம் தூயமனம் கொடுப்பாய் போற்றி
ஓம் நாராணியேபோற்றி
ஓம் நலங்கள் அளிப்பாய் போற்றி
ஓம் நித்யகல்யாணியே போற்றி
ஓம் நீதியைக் காப்பாய் போற்றி
ஓம் பகவதிதேவியேபோற்றி
ஓம் பசுபதிநாயகியேபோற்றி
ஓம் பாக்கியம் தருவாய் போற்றி
ஓம் பிரபஞ்சம் அள்பவளே போற்றி
ஓம் பிழைதனைப் பொறுப்பாய் போற்றி
ஓம் புகழினைஅளிப்பாய் போற்றி
ஓம் பூஜிக்கஅருள்பவளே போற்றி
ஓம் பொன்னிறத்தாயே போற்றி
ஓம் போகங்கள் தருவாய் போற்றி
ஓம் மகிசாசுரமர்த்தினியே போற்றி
ஓம் மலைமகள் தாயேபோற்றி
ஓம் மாதங்கிஅன்னையே போற்றி
ஓம் மகமாயிதாயேபோற்றி
ஓம் மாங்கல்யம் காப்பவளே போற்றி
ஓம் மாலவன் தங்கையே போற்றி
ஓம் மனக்குறைதீர்ப்பாய் போற்றி
ஓம் மண்ணுயிர் காப்பாய் போற்றி
ஓம் வேதவல்லியே போற்றி
ஓம் வித்தைக்குஅரசியே போற்றி
ஓம் வையகம் வாழ்விப்போய் போற்றி
ஓம் ஜெயஜெய தேவியே போற்றி
ஓம் ஜெயங்கள் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கலட்சுமி நல்லையாவின் வாழ்க்கை வரலாறு

இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வளம் நிறைந்த ஊரான உரும்பிராயில், தம்பாப்பிள்ளை சின்னம்மா என்ற தம்பதியருக்கு சிரேஸ்ட புதல்வியாக 12.09.1924ல் தங்கலட்சுமி பிறந்தார். இவர் காலம் சென்ற இராசரட்ணம், ராஜேந்திரன் அகிலாண்டேஸ்வரி, அருளாநந்தன், பராசக்தி ஆகியோரின் மூத்த சகோதரி ஆவர்.

அன்பும், அடக்கமும், கொள்ளை அழகும் கொண்ட இர் படிப்பில் மிகவும் நாட்டம் உடையவர். செல்வப் புதல்வியாக செம்பாட்டு மண்ணில் ஓடி ஆடி உலாவி வந்த தங்கலட்சுமியை "ஏழாலையை"ச் சேர்ந்த சண்முகம் அவர்கட்கும் இளையபிள்ளை அவர்கட்கும் உதித்த தவப்புதல்வன் நல்லையா விரும்பி, பெற்றோர் சம்மதத்துடன் 1941ல் திருமணம் செய்தார்.

17 வயதில் தன் அன்புத் தாய் தந்தை, சோதர, சகோதரிகளை பிரிந்து தன் கணவர் நல்லையாவுடன் அவர் பணிபுரியும் அழுகொல்லைத் தோட்டம், எட்டியாந்தோட்டையில் தன் இல்லற வாழ்க்கையை ஆரம்பித்தார்.

இல்லறத்தை நல்லறமாக கொண்டு தங்கள் வாழ்க்கைப்பாதையை இனிதே அமைத்துக்கொண்டு நல்லையா-தங்கலட்சுமி தம்பதிகளுக்கு இறைவனருளால் பதின்மூன்று பிள்ளைகள் கிடைத்தனர். தங்கள் தாயாரின் உதவியுடன் பிள்ளைகளை, கண்களை இமை காப்பது போல பாசம் பரிவுடன் அன்போடும் ஆசையோடும் வளர்த்தார்கள். பிள்ளைகளில் இருவரும் பெரும் ஊக்கம் காட்டினார்கள்.

நல்லையா – தங்கலட்சுமி இருவரும் தங்கள் வாழ்வின் பெரும்பகுதியை மலைநாட்டில் கழித்தாலும், தங்கள் சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர் யாவரையும் அன்போடும், பாசத்தோடும் உபசரித்து அவர்கள் வாழ்க்கைக்கு உதவியாகவும், வழிகாட்டியாகவும் இருந்தனர். படிப்புக்காரணமாக அம்மம்மா குடும்பத்துடன் வாழ்ந்த பிள்ளைகளும் ஒவ்வொரு கோடை விடுமுறையையும் மலைநாட்டில் தங்கள் தாய் தந்தையருடன் குதுகலமாகக் கழித்தனர்.

1967ல் உரும்பிராயய் மேற்கில், அம்மன் கோவில், பிள்ளையார் கோவில், முருகன் கோவில் அருகில் புஷ்பவில்லா எனும் புதுமனையை அமைத்து தன் வாழ்வின் இன்னொரு அத்தியாயத்தை ஆரம்பித்தார். 1972ல் கணவர் நல்லையாவும் தன் உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்று மனைவி, மக்களுடன் உரும்பிராயில் வாழத்தொடங்கினார். நல்லையா வாழைமரங்கள், தென்னைமரங்கள், மாமரங்கள், திராட்சைத் தோட்டம் அமைத்து புஷ்பவில்லாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஞ்சோலை ஆக மாற்றி உற்றார் உறவினர் சூழச் சிறப்பாக வாழ்ந்தார்கள்.

1990ப் பிரச்சனை காரணமாக எல்லாவற்றையும் துறந்து கொழும்பில் குடியேறினார்கள். கணவர் நல்லையா 29.03.1994ல் அமரத்துவம் அடைந்தார். இவர் சிலகாலம் மகன் சுகந்திரா-இந்திரன் உடன் வாழ்ந்தார்.

1996-1997 இந்தியாவில் சென்னை நகரத்தில் தன் மருமகள் மதுராம்பிகை-கிருஷ்ணதேவராஜா குடும்பத்துடன் வாழ்ந்தார். அன்னாளில் அங்குள்ள சிறந்த ஆலயங்களுக்குக் குடும்பமாகச் சென்று வழிபடும் சந்தர்ப்பங்கள் அவருக்கு கிடைத்தது.

கடவுளின் கிருபையால் 2000ம் ஆண்டில் இருந்து தங்கலட்சுமி அவர்கள் லண்டனில் தன் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளும், மருமக்களும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வந்து கூடி மகிழ்ந்தார்கள்.

எங்கள் தாயார் தங்கலட்சுமி, தன் மனஉறுதியையும் பொறுமையையும் எல்லோரையும் அரவணைத்து உபசரிக்கும் நற்குணங்களையும் என்றும் மறந்தது இல்லை.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் சுற்றத்தார் எல்லாம் கலங்கி நிற்க 2017, பங்குனி 2ம் திகதி வியாழக்கிழமை நண்பகலில் எம் தாயார் இறைவனடி சேர்ந்தார். எங்கள் அன்புத்தாயின் இழப்பு எமது குடும்பத்திற்கு எவராலும் நிரப்ப முடியாத ஒரு இடைவெளியாகவே இருக்கும்.

எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பணிவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**அன்புள்ள**

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,**

**பூட்டப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் குடும்ப விளக்கு

எங்களின் அன்பான தாயாகவும், அருமை மாமியாகவும், பாசமான பாட்டியாகவும் இவ்வுலகில் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தீர்கள்.

மம்மி நீங்கள் உங்கள் அன்பினாலேயே எங்கள் அனைவரையும் நேசித்தீர்கள். உங்களின் உறவினர்களையும் உங்கள் வாழ்வின் இறுதிவரையும் உங்களை நேசிக்க வைத்தீர்கள். அப்படிப்பட்ட ஒரு குணம் உங்களால் மட்டுமே முடியும் என்பதை நாங்கள் அறிவோம். எவருக்கும் தீங்கு நினையாத அன்புள்ளம் கொண்ட பிறவியை நாங்கள் இப்பிறப்பில் காண்பது அரிது.

அப்பம்மா நீங்கள் எல்லாருக்கும் நன்மையே சொல்வீர்கள் என்று எங்களின் அம்மா சொல்வதைக் கேட்டிருக்கிறோம். அப்பம்மா உங்களிடம் ஒரு உதவியென்று கேட்டால் அதை மறக்காமல் எப்படியும் செய்து தர முயற்சி செய்வீர்கள். நீங்கள் யாரிடமும் கோபம் கொண்டதையோ கோபமாக பேசியதையோ அறியோம். உங்களுக்கு மிகவும் மென்மையான குரல். எங்களின் அன்பான அப்பம்மா உங்களின் ஆசீர்வாதம் எங்கள் எல்லோருக்கும் என்றும் கிடைக்கும் என்பதை அறிவோம். உங்கள் மறைவு எங்களுக்கு துன்பம் என்றாலும் மரணம் இயற்கைதானே என்று நினைத்து ஆறுதல் அடைகிறோம். உங்களின் ஆன்மா சாந்தி அடைய எங்களின் மனமார்ந்த பிரார்த்தனைகள்.

மகன் தேவராஜா, மருமகள் அம்பா

பேரப்பிள்ளைகள் அரவிந்தன், லவானி, ஆர்த்தி, அருள்ராஜ்

பூட்டப்பிள்ளைகள் ஓவியா, கவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத் தாயாரின் இறுதி அஞ்சலியின்போது அன்னைக்குச் சமர்ப்பித்த இரங்கலுரை - 11 மார்ச் 2017

இன்று, இங்கே நாங்கள் கூடியிருப்பது எனது தாய், தங்கலட்சுமி நல்லையா அவர்களுக்கு எங்களது இறுதி அஞ்சலிகளைச் செலுத்துவதற்கும் மற்றும் ஒரு துயரமான ஆனால் பிரியமான வழியனுப்புதலை மேற்கொள்வதற்குமாகும். இங்கே, பல குடும்பங்களையும் மற்றும் நண்பர்களையும் காண்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எனவே அனைவரும் ஒன்றாக, எங்களுக்கான ஒரு வெகுமதியாகவிருந்த அவரின் வாழ்க்கை குறித்தான மகிழ்ச்சியையும் மற்றும் அவரது பிரிவு ஏற்படுத்திய துயரையும் ஏற்றுப் பகிர்ந்து கொள்வோமாக. இவ்விதமாய் பகிர்வதில், எங்களது துயரங்களை இலகுபடுத்தியும் மற்றும் சந்தோஷங்களை கூடுதல் தெளிவான முறையில் நினைவுபடுத்திக் கொள்ளவும் முடியும் என நான் நினைக்கிறேன்.

எனது தாய், தங்கலட்சுமி கடந்த மார்ச் 2 அன்று அமைதியான வகையில் இறைபதம் எய்தும் போது அவருக்கு வயது 93. 1924 ஆம் ஆண்டு செப்டெம்பர் 12 ஆம் திகதி, உரும்பிராயில் பிறந்த அவர், ஓர் அமைதியான, படிப்பார்வம் கொண்ட இளம் பெண்ணாக வளர்ந்தார். அவரது பதினேழாவது வயதில் எனது தந்தையாரை திருமணம் செய்து, மனைவி மற்றும் அதன் பின்னே தாய் எனும் ஸ்தானங்களை வகிப்பதற்காக தனது கல்வியை இடைநிறுத்திக் கொண்டார். இளம் வயதுடையவராகவும் அதிகளவிற்கு ஒரு சிறுபெண்ணாகவுமிருந்த அவர், தனது புதிய வகி பாகத்திற்கும் பொறுப்புகளுக்குமாக தனது தன்மைகளாக நீங்கள் பலரும் அவரிடம் காணும் அந்தப் பரிவையும், அமைதியையும் உடையவராக தன்னை மாற்றியமைத்துக் கொண்டார்.

ஓர் பணிவான, தன்னிடமுள்ள அனைத்தையும் கொடுப்பதை மட்டுமே கொண்ட பெண்ணாகவும், மற்றும்தனதுகுடும்பம், குறிப்பாக பிள்ளைகள எப்பொழுதும் அனைத்தையும் கிடைக்கப் பெற்றவர்களாக இருப்பதை அவர் உறுதிப்படுத்திக் கொண்டார். ஒரு தாயாக தனது பாத்திரத்தை வகிப்பதில் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். அது பொறுமை மற்றும் அன்பை மட்டுமன்றி பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் தியாகங்களையும் மேற்கொள்கின்றது என்பதை மற்றைய பெற்றோர்களினால் மாத்திரமே (விசேடமாக ஒரு தாயினால்) அறிந்து கொள்ள முடியும். எனது தாய் அவரது 13 பிள்ளைகள் - நான் மற்றும் எனது 12 சகோதரங்களுடன் இந்தப் பொறுப்பைச் செய்து முடித்தார். தனது வாழ்க்கையில், சிவில் யுத்தம் உட்பட, பல கஷ்டங்களைக் கடந்து வருவதற்கு அவரது பலமும், மனத் துணிவும் மற்றும் அயராத தன்மையும் துணை நின்றன. இவற்றினூடே, அவரது பிள்ளைகள் பலரும் ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி மற்றும் அவுஸ்திரேலியா போன்ற மேற்கு நாடுகளில் பாதுகாப்பான மற்றும் நிறைவான வாழ்க்கையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவர் துணை நின்றார்.

எனது தாயின் இந்த அயராத முயற்சியின்றி, இவையனைத்தும் சாத்தியமாகியிருக்க முடியாது. இது, அவர் தனது தற்போதைய மற்றும் எதிரக்காலத் தலைமுறைகளுக்காக விட்டுச்செல்லும் ஓர் உன்னதமான பாடமும் பண்புமாகும். இவையின்றி, இங்கு நான் இல்லை. அவரின்றி எனது இரண்டு புதல்விகளினதும் திருமணத்தை நான் நல்ல விதமாக நடத்தி வைத்திருக்க முடியாது. அவருடனான எனது வாழ்க்கையின் இந்த மதிப்பு மிக்கத் தருணங்களை பகிரந்து கொள்ள முடியுமாகவிருப்பது, எனது மிகப் பெரும் சந்தோஷங்களில் ஒன்றாக உள்ளது.

அவர் என்னை 'ராசா' என அழைப்பது உங்கள் பலருக்கும் தெரியும் - அது எனக்கு அவர் வாஞ்சையுடன் வைத்திருந்த பெயர். அவரது மூத்த பிள்ளையாக, மிகக் கஷ்டமான தருணங்களை அவர் கடந்துவந்ததை நான் கண்டிருக்கிறேன்; பலரிலும் நான் கணடிராதபலம் மற்றும் அடக்கத்தையே அவர் எடுத்துக் காட்டினார் என்பதை மட்டுமே என்னால் உங்களுக்கு சொல்ல முடியும்.

எனது தாய் தையல் கலையில் தேர்ந்தவராக இருந்தார், அது அவருக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தரும்பொழுது போக்காக அமைந்திருந்ததை நான் நினைத்துப்பார்க்கிறேன். தையல் வேலை கவனம், நுணுக்கமான விடயங்கள் மீதான ஒரு குவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றைத் தேவைப்படுத்துகிறது. அது, அவர் மிகுந்த சாதுரியமும் மற்றும் அவசியமான அனைத்தையும் செய்கின்ற ஒரு பெண்ணாக இருந்ததை உறுதிப்படுத்துகிறது. அவர் உரும்பிராயில் (இலங்கையில் எங்களது கிராமத்தில்) அவரது கரிசனம் மற்றும் தயாள குணம் என்பவற்றுக்காக மிகவும் மதிக்கப்பட்டார் என்பதை நீங்கள் பலரும் ஒத்துக்கொள்வீர்களென நான் நம்புகிறேன். ஏதேனும் ஒரு தேவையுடனான எந்தவொரு நபர் வந்தாலும், அவர் அவர்களை வெறுமனே திருப்பியனுப்ப மாட்டார்.

அவருக்கு பிரியாவிடை சொல்வதென்பது கடினமானது. எங்களுக்கு இருந்த நேரங்களில், நாங்கள் ஒன்றாக கூடுதலான நேரத்தைச் செலவளிப்பதற்கு கூடுதலான நேரம் இருந்தது என நாங்கள் நினைக்கிறோம். அவர் ஒரு செழுமையான மற்றும் நிறைவான வாழ்வைக் கொண்டிருந்தார் என என்னால் சொல்ல முடியுமென்பதை, அது சொல்கிறது. அவரது பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் மற்றும் பூட்டப் பிள்ளைகள் என அவர் தொடர்ந்தும் வாழ்கிறார். மூன்று தலைமுறைகளுடன் அவரது அன்பையும் ஒரு மரபு வழிவந்த பண்புகளையும் விட்டுச்சென்றுள்ளார். எங்களது வாழ்க்கைகளில் அவரைக் கொண்டிருப்பதில் நாங்கள் வளம் பெறுகிறோம் என்பதுடன் அவரது வாழ்க்கையில் மூன்று தலைமுறைகளைக் கண்டதில் அவரும் பேறடைகிறார். எங்கள் ஒவ்வொருவரினதும் வாழ்க்கைகளையும் அவர் தொட்டுச் சென்ற விதம் என்றும் நிலைத்திருக்கும் எனவும் அவற்றை மற்றொருவருடன் பகிர்வதில் அந்த நினைவுகளை உயிர்ப்புடன் வைத்துக் கொள்வதற்கும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர் பலம் பெற்று தனது பண்புகளாக அவர் விட்டுச் சென்ற குடும்பத்தை நான் இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

**மகன் ஸ்ரீஸ்கந்தராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது அருமைத் தாயார்

எங்கள் அனைவரையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு எனது அருமைத்தாயார் இறைவனடி சேர்ந்து விட்டார். முருகப் பெருமானின் பேரருளால் என் தாயின் மூத்த மகளாகப் பிறந்த நான், அவருடைய கண்ணியமும், கட்டுப்பாடும், தெய்வ பக்தியும் நிறைந்த நாளாந்த வாழ்க்கையை நினைவு கூர்ந்து, தலை வணங்குகின்றேன்.

எனது சிறு வயது முதல், அவருடைய தள்ளாத காலம் வரை எங்கள் மத்தியில் ஒரு ஆணிவேராக நின்று, அன்புடனும் பாசத்துடனும் எங்கள் பெருங்குடும்பத்தைப் பராமரித்த பண்பையும் பலத்தையும் நினைந்து பெருமைப்படுகின்றேன்.

சின்னஞ்சிறு வயது தொடக்கம், விபரிக்க முடியாத ஏற்றந்தாழ்வுகளை, மௌனமாக இன்முகத்துடன் தாங்கியது மட்டுமன்றி, தன்னலம் கருதாது, தன்னை நம்பி தாங்கி நின்ற பெரியோர்கள், பெற்றோர், சிறியோர், சுற்றார் அனைவரையும், அணைத்துக் கைகொடுத்துச் சிறப்பித்த கருணையை என் நினைவில் என்றும் நிறுத்துவேன்.

ஒரு பெருங்குடும்பத்தை நல்வழியில் வளர்ப்பது இலகுவல்ல. எவ்வளவோ சவால்கள், எதிர்பார்ப்புகள், ஏற்றந்தாழ்வுகள், எல்லாவற்றையும் எதிர்நோக்கி நின்றது மட்டுமன்றி எல்வோருக்கும் தன்வழியும், தனிவழியும் பெருக்க அனுசரித்து, அணைத்த பெருங்குணத்தை எப்போதும் போற்றுவேன்.

எனது அன்புத் தாயாரின் ஆத்மா சாந்தியடைய முருகப் பெருமானை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

புஸ்பா கனகரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாசமிகு அன்னையே!**

**மறக்க முடியுமா உங்களை?**

உலகில் எங்களின் முதலுறவாய்
உயரிய பண்பின் இருப்பிடமாய்
குடும்பக் கூட்டின் தலைவியாய்
வெள்ளை உள்ளம் கொண்டவராய்
குவலயம் வாழ்ந்தாய் எம் தாயே
ஆனந்தம் கண்ட வீடு அழகிழந்து போனது.

இல்லறம் நல்லறமாக இனிய வாழ்க்கைத்
துணைவியாக, அன்புத் தாயாக, அருமை
மாமியாக, அன்புப் பாட்டியாக மொத்தத்தில்
ஒரு நிறைகுடமாக சிறந்த வாழ்க்கை
வாழ்ந்த அன்னையே நீங்கள் இளம்
தலைமுறைக்கு ஓர் ஒளிவிளக்கு.

அப்பம்மா என அழைத்திட முடியாத அன்புப் பேரன்
மம்மி என அழைத்திட முடியாதஅன்பு மகன்
பெற்ற பிள்ளை போல் கருதி உற்ற
ஒருதாயாய் உடனிருந்த மாமி
என அழைத்திட முடியாத மருமகள்
நாம் மகிழ்ந்திருந்த அன்புருவம்
எங்களுடன் இன்று இல்லையென
ஏங்குவதே எம் நெஞ்சம்

உங்களை எங்களது தாயாக, மாமியாக
அப்பம்மாவாக தந்தமைக்கு இறைவனுக்கு கோடி நன்றி.
நினைவால் மீண்டும் இணைவோம்தாயே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
மகன் கோபால்,மருமகள் வசந்தி

**பேரன் அகிலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Remembering my Mother

To share the gift of Thagaledchumi Nalliah's life, is to establish who she was and share collective memories.

My mother, Thangaledchumi was born on 12 September 1924 in Urumpirai. She grew to be a studious and quiet young girl. At the age of seventeen, she married my father Shanmugam Nalliah , cutting short her education to take the role of wife and soon after mother. Although young and still very much a child herself, she adapted to her new role and responsibilities, with the grace and calm . She was well regarded in Urumpirai (our village in Sri Lanka),especially for her thoughtfulness and generosity.

A humble woman who only gave all she had, and ensured that her family, particularly her children were always provided for. She had the strength of will and perseverance to navigate the many hardships and obstacle that her life bought. Through it, she managed to ensure that many of her children secured safe and fulfilling lives, as they settled in western countries . Without my mother's perseverance, this would not have been possible. This is a wonderful lesson and legacy, she leaves behind for generations now and in the future . Without this I would not have been able to have her attend both my daughters weddings. It has been one of my greatest joys, to be able to share these treasured events in my life that were so precious to me. We wish that we had more time and that perhaps during the time we had, we had spent more of it together. She is survived by her children, grandchildren, and great grand children. With whom she leaves a legacy of her love and will. The ways she touched our lives will remain and we keep those memories alive by sharing them with each other. Remembering that family is where she drew her strength and left her legacy.


**Mahan Sriskandarajah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Sinnathambi Shanmugam + Elliapillai
  - Selathurai
  - Annamma
  - Nalliah
  - Subramanium
  - Sithrangi
  - Thangamma
  - Miruna + Panagiotis
    - Nathan
    - Hannah
  - Balaskanthan + Vasanthamalar
    - Akilan
  - Kalaimany + Ragupathy
    - Karthica + Tim
      - Loris
      - Sebastian
    - Vinayagan + Sangeetha
  - Vinayagathevarajah + Parasakthi
    - Sivageethan
    - Thanushan
  - Araamutham + Stephen
    - Jonathan
    - Andrew
  - Murugavelrajah
  - Nantheeni
  - Suthanthira + Vijayaindiran
    - Vysna
  - Rajendran + Rathika
    - Sreram
  - Indumathy + Karunyanesan
    - Naomi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A truly Virtuous women

Proverbs 31:10 & 28 "Who can find a virtuous women? for her price is far above rubies... Her Children arise up, and call her blessed; her husband also, and he prasieth her".

Mummy I sat and thought of you today, I thank God for his greatest gift, making you our mother. My thoughts went years back, how you taught us what is right and wrong and you had the grace not to judge the wrongs we did but empathise and helped to see us through. At times you were hurt but never showed it out. Though we are many in numbers, your love was undivided. You loved us without question, no matter what we did. Even through you were not always right beside us, you brought us up be confident and successful adults. You never kept anything for yourself, without a thought you gave and gave. There was never any guile or evil in your speech and deed. You were quiet and meek. You never raised your voice at anyone. Will I ever have your patience!? You were a blessing to your parents and siblings, to our father and to all your children. God blessed you abundantly with health, strength and long years. The last few months had been hard for you. Often you asked " Take me to Your home". I thought you were referring my earthly home, and told you to get better, and then I could take you. I didn't understand why you kept asking for your dress. However now I know you wanted to get ready to go to your eternal home to be with your creator.

Mummy it was in your nature to do thinks quietly, in the same way you departed from us while Perianna and Nanthini were besides your bedside. I am sure you are in a better place where there is no more pain and no more sufferings. Thank you mummy for everything, we miss you so much. Age does not matter you and always will be our Mother.

**Daughter Ara Stephen(Baby)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Rock with a Child Like Nature

I often here when people talk about their grandmas, reflecting fondly on being spoilt with numerous treats, someone who cooks them lots of tasty meals or even someone who always lets them get their way.

Our Ammamah wasn't exactly like that! More often than not it was us making tea for her or me having to give in and watch what she wanted to watch on the television. I'm not saying this to point out a flaw because these were not weaknesses but in fact her strength. Ammamah always had this child like nature!

She never let herself get down about anything and she very rarely got overly concerned about what was going on around her. She was a rock and she held our big family together, she was the centre of our worlds. Even when things got hectic she would stay silent and then later quietly inquire as to what was going on and why we were getting so caught up in ourselves, reminding us that there was no point taking ourselves too seriously.

When I think about Ammamah, I think about her infections laugh! She would stick her tongue out, scrunch her face up, close her eyes and giggle away. When I was younger I used to love seeing her laugh, so much so that we would do whatever we could to see her face light up, to be honest I don't know if she found me funny or she was just being polite but I loved seeing her laugh nonetheless.

Ammamah had a love for chocolate! If I ever wanted some, I always knew if I said Ammamah wanted chocolate my mum would let me open a box. She loved chocolate so much so that even when she stopped eating and drinking when I asked her if she wanted chocolate she would let me put a small piece into her mouth and she would just hold it in there.

The last few years haven't been easy for Ammamah, as much as it pains us to think that we are no longer going to share time together



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

or create new memories, I know my whole family would agree with me when I say that we are greatful to God for the long and healthy life that Ammamah was blessed with.

Ammamah gently slipped out of this world just how she lived whilst on it- peacefully, silently and without creating a fuss..

I will miss my Ammamah very much but I thank her for giving me the great gift of this eneroumous family through who her memory will never fade. I know she must be so happy to see so many of us all together celebrating her life. I don't want to be ungrateful and see this as a purely sad moment, her suffering has ended and she is now back together with Ammapah.

The Bible contains a verse: "Mark the perfect man, and behold the upright; for the end of that man is peace", Ammamah surely is a testament to this.

**Grand son Andrew**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My thoughts on Appamma.,

I gaze around. I see one family, brought together, to mourn for one of our own. I could not help but think thirteen children, numerous grandchildren and countless great grandchildren; what a legacy. As I struggle to put my thoughts into words I realize in many families, grandparents are a somewhat abstract concept; there are pictures of them around the house, you might get a birthday card in the mail, or see them on holidays, but in our family she was a part of everyday life. Throughout the whole ceremony, the people shaking my hand, from far and wide, whispering condolences, all I could think of was how many had arrived at the funeral, how many people had known and cared about my Appamma.

I saw my relatives, those people connected to me by blood, and their faces. The moment I saw their faces, I knew. I knew they weren't just people connected to me by blood, I knew I could count on them someday to help me in a situation. They're family, and family is always there for you through thick and thin.

I realized that one word, family, sums up Appamma for me pretty well. From the beginning to the end, whether near or far, big or small, she will always be there, through the familial ties she has so masterfully woven around us. While she may not be with us in flesh, I now know that she will live on and be remembered, through the bonds we have formed due to her, the memories we have created with her and the choices we will make because of her. The song is ended but the melody lingers on...

**Grand son Sivageethan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Periamma

I am Rajani one of the children of Mummy's younger sister Eesu-Easwary. I wish to share my thoughts and the beautiful memories.

I could say that my Periamma – Mummy had a life, full of joy and happiness. She was a pretty, tall women who dress up very perfectly. I am blessed to have 13 beautiful and loving cousins through her. She was dearly addressed by my Periyappa – Daddy M…A..L..A..R . Yes, Periammah -Muummy was a kind, soft natured, sweet woman carries a beautiful smile on her face for everyone doesn't matter who ever they are. Just like a flower she was always pleasant.

We were joint family and she provided everything equally and lovingly among all of us doesn't matter whatever it is. All of our family members were united with love and we had a unique life style in our village Urumpirai. During my school vacation I used to go to Dehiowitta with my cousins, mummy and Daddy by private vehicle. The wonderful time I had there with mummy and Daddy are never ever be forgotten in my life time. We stayed there in a huge the house. We used to go to river side for fishing. When we came back home the food was nicely arranged on the dining table and we all sat around the table, enjoyed the food with lots of laughter and fun.

Again, I got an opportunity to live with mummy at Colling Wood Place, Colombo. During my stay my hobby was stitching which I learnt from my mother. Mummy always ask me " Rajani show me what you were sewing all these time". I brought the pillow covers and the dress which I sew and showed her. Mummy was with a big surprise on her face admired and said "It's so beautiful, did you sew all of these" and continued Eesu too sew beautifully. I was really encouraged and filled with joy and happy.

During the time of raising her 13 children, as usual, mummy also went through responsibilities and tough times. But I never ever seen her raising her voice, losing her temper, emotionally imbalanced and complaining. I have always seen her well-focused on what she was



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

doing, remains calm all the time and moreover, occupy herself in reading. Yes, she was very good reader and regardless of her situation kept herself occupied in varieties of readings. These great qualities she inherited from her wonderful parents and we all too must learn from her.

My dearest Mummy, I love you and always keep you too beside my mother and aunty during my daily prayers. Thank you for your love and care.

*Loving and kind in all her ways,*

*Upright and just to the end of her days;*

*Sincere and true, in her heart and mind,*

*Beautiful memories, she left behind.*

**Niece Rajani**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Dearest Ammamah... An Angel called to Heaven
## By Jonny Stephen

At this most difficult time of grief I would like to share a poem it is titled "I'm Free" and is pertinent to my Ammamah.

Don't grieve for me, for now I'm free,
I'm following the path God laid for me.
I took his hand when I heard his call,
I turned my back and left it all.

I could not stay another day,
To laugh, to love, to work, to play.
Tasks left undone must stay that way,
I've found that peace at the close of the day.

If my parting has left a void,
Then fill it with remembered joy.
Family shared, a laugh, a kiss,
Ah yes, these things I too will miss.

Be not burdened with times of sorrow,
I wish you the sunshine of tomorrow.
My Life's been full, I savoured much,
Good friends, good times, a loved one's touch,

Perhaps my time seemed all too brief,
Don't lengthen it now with undue grief.
Lift up your heart and share with me,
God wanted me now, He set me free.

Ammamah was a mother of 13 children, a dedicated and loving mother, wife, grandmother, great-grandmother, mother-in-law and aunt. She was a humble, selfless, caring woman who touched the lives of many. Although she has closed her eyes and slipped into Gods arms leaving a void in our lives, she also leaves behind a magnificent legacy that will continue for years to come.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I thank God for the life of Ammamah, she was such a blessing to our whole family. When I was young and Ammamah would be staying at our home, she would have this habit, that at the time was somewhat slightly annoying but looking back now shows me just how much she loved and cared for us all. She would look at the time towards the early evening and as soon as the clock struck 6pm and the working day was done, she would begin asking. "Jonny, Amma enga?" I would reply in broken tamil "Amma velar still Ammamah", 10 mins later she would do return and this time ask "Jonny enn Amma varaylai?" and I would respond " Amma velar".

This cycle would continue for a good hour until my mum returned home, Ammamah would wait at the window looking out ardently for my mum to return from work and would only be at peace when she returned. Both my brother Andy and cousin Vina would also be able to share similar stories. Therefore I believe that Ammamah is standing at the gates of heaven now with Ammappah ardently looking out and watching over her family, and I believe one day we will see her again.

Thank you.

**Grand Son Jonathan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Ammammah

Ammammah has been constant, calm and loving presence for us throughout our lives, and across continents. At celebrations of births, birthdays, age attainments and marriages she was there. The first experience of Ammammah for me and my sister Nirupa was when she came to help my mother look after our baby sister Miruna. One of our last was when I visited her and told her that my wife Emma and I were expecting our first baby. Despite her grave ill health, she acknowledged my announcement, her face brightened and her eyes lit up.

She was always very interested in her grandchildren and great grandchildren, and could remember all of their names until the end of her life. She was very modern in her outlook, warmly embracing new members of the family from all cultures, including my wife Emma. Although in her later years, her physical health was not good, she would always light up when Emma was there

Ammammah, you have been a part of so many people's lives for so long it is hard to imagine you have gone. We thank you for being a loving mother, mother in law , Grand mother and great grand mother.

On behalf of my family I also would like to record our gratitude and appreciation to kala Sithy and Nanthu Siththy for their Magnificient and tireless efforts to care for Ammammah in her latter years. On behalf of my Parents I would like to convey Special thanks to Aunty Jeya for her kindness, her patience , and her skills that enabled Grandma to live her life to the full and on her terms.

Swami Vivekananda said " This life is a hard fact, work your way through it boldly, though it may be adamantine, no matter, the soul is stronger.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When we let loose our feelings, we waste so much energy, shatter our nerves, disturb our minds, and accomplish very little.

The calmer we are the better we are . All faiths are good so far as they encourage us to lead a religious life, the more faiths there are, the more are the venues for successful appeal to the divine instincts in all of us. "

With my prayers for Ammamah to Rest in peace.

**Grand Son**

**Myooran**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Ammama

My earliest memories with Ammama were when I was six years old. She came to stay after my baby sister was born. I remember hearing the soft patter of her feet and feeling the delicate swish of her sari as she moved around the home. We would look at fairy tale books together, her warm comforting presence by my side that reassured me of her love.

Ammama was there at my wedding to my dear husband. He was very fond of her and saw her as a calm and stabilizing influence in our family. She was also at the weddings of both my brother and sister and she even danced at my children's first birthday celebrations. Whenever I visited Ammama with the children her face would light with joy. She was always delighted to be around her grandchildren and great grandchildren. She let us to be just as we are, allowing accepting and never chiding.I will always remember Ammama's quiet loving presence. Soft fresh skin, bright sparkling eyes, hair dark with silvery white threads. So natural and beautiful.

I will miss you Ammama.

**Grand Daughter**

**Nirupa**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பேரன்புக்குரிய பெரியம்மா(Mummy)விற்கு அஞ்சலி

எனது தாயாரின் மூத்த சகோதரி. பெரியம்மா என்று ஆசையுடன் கூப்பிடவில்லை, அன்பாக பாசமாக mummy என்றழைப்பது எமது வழமை காரணம் பெற்றபிள்ளை பெறாபிள்ளை என்று வேறுபாடற்ற மனப்பாங்குடன் தன் பிள்ளை போன்று எம்மீது பாசம் கொண்ட ஒரு அம்மா தான் அவர்.

ஒரே வீட்டில் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தவர்கள் நாங்கள், என் அறிவுக்கு எட்டிய காலம் தொடக்கம் மிக நேர்த்தியாக சேலை அணிந்து அழகாக கொண்டையிட்டு ஒரு பண்புள்ள அமைதியான ஆளுமை மிக்க தோற்றமுடையவர். எமது மம்மி. குடும்பத்தின் மூத்த சகோதரி என்பதற்கு எடுத்துக்காட்டாக அன்பு, உண்மை, சுயநலமின்மை போன்ற நல்ல பண்புகள் நிறைந்த மனம் கொண்டவர். இவற்றை தன் செயல்களிலும் வெளிப்படுத்தியவர்.

எதையும் எல்லோருக்கும் கொடுத்து உதவி செய்வது, எந்த ஒரு விடயத்தையும் அதிகம் விவாதிக்காமல் ஏற்றுக்கொள்வது, இன்பம்,துன்பம் எதையும் ஒரே மாதிரியாக ஏற்று தனது வாழ்வை சிறப்பாக வாழ்ந்து காட்டியவர்.

வாசிப்பு என்பது அவரின் பிரியமான பொழுதுபோக்கு. தான் வாசித்தவற்றை எமக்கு அழகாக எடுத்துரைப்பார்.

மிகவும் நீண்டநாட்கள் அவருடன் அந்நியோன்யமாக வாழ்ந்தோம் எனினும் நீண்ட நாட்களாக அவரைப் பார்க்கவில்லையே, நேரில் வந்து இறுதிக்கிரிகைகளில் கலந்து கொள்ளவில்லையே என்பது தாங்கமுடியாத வேதனை.

இன்னும் ஒரு பிறவி நான் எடுத்தால் மம்மி நீங்களே எங்கள் பெரியம்மாவாக வரவேண்டும் என்று இறைவனிடம் கேட்டு உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

பெறாமகள் மகிமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear Appammah

Our memories of you are many and unique to each one of us. We will hold them near and dear to our hearts for the rest of our lives. You lived a long and prosperous life with quietness as your strength, gentleness as your nature and patience as your virtue. These beautiful qualities you have gifted to your son, our Appah and we are so thankful to you. Though we have lived far from you, you were always in our thoughts and loved very much. To know we will not see you again is a hard reality. We will miss you and your child like heart.

Rest In Peace Appammah.

Your Granddaughters,
**Yarmini Dharini & Rushani**
**Melbourne Australia**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dear Appammah,

I'm Sreram and I'm Appamma's youngest grandson. Appamma has been with me for as long as I can remember. As a child, I remember playing with her and seeing her smile at the sight of me. Whenever my mum was busy, she would always care for me unconditionally, with no hint of complaint.

It was clear that Appamma loved her grandchildren very much. During her times at the hospital, only at the sight of me and my cousin Abi would she liven up and start talking. She was a very affectionate person, and loved company - during visits, she would always ask visitors to stay for a bit longer whenever they were about to leave.

Appamma, in my opinion, has led a very long and blessed life. With thirteen children, I can't even imagine how much of her time and hard work she must have devoted to nurture them. During her later years however, God had clearly returned her a favour, since she was privileged to have constant and selfless care from her daughter Nanthini mami.

I pray that Appamma can finally rest in peace, and I know that she will be looking down on us from up above. Appamma, we love you, and you will always have a place in our hearts.

**Sreram**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute from Naomi

I'm Abi and I am one of Ammamma's youngest grand-daughters. My ammamma was very special to me and I loved her very much. She had lived with me for most of my life and had played a big part in my upbringing. She fed me, played with me and even put up with my worst moods and yet she had never once scolded me. It was this unconditional love which I had admired about her.

Ammamma was a woman of a few words but she was one of the very few people who I would feel comfortable in speaking Tamil to. Though she would not say much, it was clear how much she loved us through the way she would become so happy so see us. I saw this even in her old age whenever I visited Ammamma with Amma. She always tried to stop us when we were leaving. For she always wanted to be surrounded by her children and loved their company.

Ammamma had lived a very long and a blessed life. She lived to see her grandchildren getting married and even her great grandchildren. She was constantly surrounded by people who loved her dearly and was generally quite healthy for most of her life. She was sweet and loving which was why she was respected and loved by many.

Ammamma without a doubt I will miss you. I will miss seeing you, talking to you and simply hugging you. I'll cherish those sweet memories you had left but I am not worried for you are in safe hands with God and I know I will definitely see you again.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அன்பான அம்மா,

எங்கள் அன்பான அம்மா, என்றும் எங்களை அரவணைத்த அம்மா, நீங்கள் பல ஆண்டு காலம் வாழ்ந்தமை முருகப் பெருமான் உங்கள் சந்ததிக்குத்தந்த வரம் என்று வணங்குகிறோம். உங்கள் நினைவுடன் வாழ்வணைத்தும் வாழுவோம். எப்பிறவியிலும் நீங்கள்தான் எங்கள் அம்மாவாக வரவேண்டும் என்றும், உங்கள் ஆத்ம சாந்திக்காகவும், இறைவனை வணங்குகிறோம்.

என்றும் உங்கள் நினைவுடன்,

மகள் சுதந்திரா மருமகன் விஜியேந்திரன்

பேரப்பிள்ளை வைஷ்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thank You

On behalf of my brothers, sisters and their families, I would like to express my sincere thanks to all of our friends, relatives and everyone who is present here to pay their last respect to my mother. Thank you for being with us.

My mother – Mummy, as she was known to everyone – was caring, thoughtful, compassionate and loved all of her family unconditionally. She touched everyone who came into contact with her in our village Urumpirai in Sri Lanka and also here in London.

All of us have rich memories of Mummy; I still remember how she took care of me and my daughter Karthica, when Karthica was a newborn baby. Her love, care and support was so valuable but I took it for granted at the time. It was only when I had my second baby Vina that I realised how much Mummy had helped me, as I struggled to take care of my son without her by my side.

I feel blessed that both of my grandsons (Loris and Sebastian) had the opportunity to sit on my mother's lap, and I know Loris fondly remembers playing with her walking frame.

I would like to express my sincere thanks to Jeya who was Mummy's carer for the last 5 years and treated her like her own mother.

I also would like to say a very big thank you to my younger sister Nantheeni, who has devoted most if not all of her time to helping Mummy be comfortable and happy.

I am thankful to God for giving us a wonderful and caring mother, who loved us all unconditionally. Thank you Mummy, we all love you and will miss you greatly.

*Kala Ragupathy*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Big Thank you

I am Canagaratnam , son in law of Mrs Nalliah I am one of thoseoutsiders, lucky enough to find a wife in Urumpirai. . To an outsider like me the village always stood out for its remarkable solidarity and unity upholding family life. My mother in law embodied all those values we outsiders admire about that beautiful village.

As repeatedly stated by her children ,and grand children My mother in law for over ninety years with her unassuming , and gentle outlook touched every one who came in contact with her. With remarkable ease she built a large family. To me what seems important, is that she has left us with a huge legacy of good people, who are always around us and to who I know would turn up at times of need. In every one of you we recognise what she has given us. She had that remarkable ability to bring the best out of people.

On behalf of this large and beautiful family , I would like to thank you all for your kindness, your solidarity and the over whelming support over this last few critical months and years. We have been overwhelmed by the spontaneous grief and by the enormous efforts to gather around us often , travelling many miles from places such as Birmingham, to alleviate our distress. We stand before you with enormous gratitude and in comfort knowing very well that , we will never be alone .

We thank you,

**Dr. Rajendrem Canagaratnam**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்நன்றி கொன்ற மகர்க்கு - திருக்குறள்

எமது இதய தெய்வத்தின் பிரிவால் வாய்விட்டுச் சொல்லியழ வார்த்தையின்றி தவித்திருந்த வேளையில் எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உள்ளூரிலும் வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளின்போது கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்களுக்கும், மலர்வளையங்கள், மாலைகள், மலர்கள், சாத்தி அஞ்சலி செய்தவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளைச் சிறப்பாக முன்னின்று நடத்தியவர்களுக்கும், எமது பணிவான மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இறுதிக்கிரியைகள், அந்தியேட்டிக்கிரியைகளைச் சிறப்பாக நடத்திய அந்தணப்பெருமக்களுக்கும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இம்மலரை அழகாக அச்சிட்டுத்தந்த ஜே ஆர் அச்சகத்தினருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

இங்ஙனம்

**குடும்பத்தினர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



Designed & Printed @ JR Print
Tel: 020 8503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org